**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C . No. 362/2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 5 |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்புசாமி |
| Father's Name | : | குமாரசாமி |
| Village | : | நத்தம் |
| Taluk | : | நத்தம் திண்டுக்கல் |
| Calling | : | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 |
| Religion | : | இந்து |
| Age | : | 54 |
| ACCUSED | | எதிரி – அசீம்கான் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2023.

**முதல் விசாரணை &-**

நான் தற்பொழுது நத்தம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன் நான் பெரம்பலூர் மாவட்ட வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியில் இருந்த போது 10.10.2022 அன்று பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 228 / 2022 இதச பிரிவுகள் 279, 337, வழக்கில் சம்மந்தப்பட்ட TN 46 AB 2830 என்ற பதிவெண் கொண்ட கனரக Ace Grain வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கக்கோரி பாடாலூர் காவல் உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று அன்றைய தினம் காலை

08.45 மணியளவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். வாகனத்திற்கு எந்தவித சேதாரங்களும் காணப்படவில்லை. வாகனத்தின் பிரேக் சிஸ்டம் சரியாக இருந்தது. டயர்கள் மற்றும் ஸ்டேரிங் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்தானது எவ்வித இயந்திரக்கோளாரினாலும் ஏற்படவில்லை என சான்று அளித்தேன். நான் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:– ( எதிரி தரப்பில்) இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**